2013 யூலை 03 ஆம் நாள் மகரகமை இளைஞர் அரங்கில் இடம்பெற்ற
இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது வருடாந்த விழாவில்,
நேபாளத்தின் முன்னைநாள் பிரதமர் - நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட தலைவர்
**தோழர் மாதவ் குமார் நேபாள்**
நிகழ்த்திய உரை.

தலைமைத் தோழரே,

பேராளர்களே,

சிறப்பு விருந்தினர்களே,

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்களே, தோழியரே,

அன்பார்ந்த தோழர்களே,

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது வருடாந்த விழா நடைபெறும் மிக மகிழ்ச்சிகரமான இச் சந்தர்ப்பத்தில், நானும் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மிக முக்கியமான இச் சந்தர்ப்பத்தில் உரை நிகழ்த்துமாறு என்னை அழைத்தமையையிட்டு தலைமைத் தோழருக்கும், பொதுச் செயலாளருக்கும், ஏற்பாட்டுக் குழுவின் அனைத்துத் தோழர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

நேபாளமும், இலங்கையும் நீண்டகாலமாக நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ள இரண்டு அயல் நாடுகளாகும். இந்த இரண்டு தேசங்களும் பிராந்திய சர்வதேச பிரச்சினைகளையிட்டு ஒருமித்த கருத்தும், மதிப்பீடும் கொண்டுள்ளன. அதேசமயம் சிறந்த நட்புறவையும் பாசத்தையும் கொண்டுள்ள இரண்டு நேச நாடுகளாகும். நான் இங்கு பிரதிநிதித்துவப்படுத்தும் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சியும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் நீண்டகாலமாக தோழமை உறவுகளைக் கொண்டுள்ளன. கடந்த காலத்தில் உங்களது கட்சியின் தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் நேபாளத்திற்கு வருகை தந்து எமது கட்சி மாநாடுகளில் பங்குபற்றி உள்ளனர். இரண்டு கட்சிகளினதும் தலைவர்கள் எமது இரண்டு நாடுகளுக்கிடையில் அடிக்கடி விஜயம் செய்வதன்மூலம் பிராந்தியத்தின் கட்சிகளிடையே மிக நெருங்கிய நட்புறவை வெளிப்படுத்தி உள்ளன.

ஜனநாயகம், நீதி, நியாயம், சமத்துவம் என்பவற்றிற்காக நாம் முன்னெடுத்த போராட்டங்களுக்கு உங்கள் கட்சி காட்டிய அனுசரணைக்கும், ஒத்துழைப்பிற்கும் இதயபூர்வமாக எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இம் முக்கிய சந்தர்ப்பத்தில் **“தென்னாசிய இடதுசாரி இயக்கம் முன்னுள்ள சவால்களும், சந்தர்ப்பங்களும்”** என்ற தலைப்பையே நான் உரையாற்றத் தெரிவு செய்துள்ளேன். இத் தலைப்பு எமது தென்னாசிய பிராந்தியத்தின் சூழமைவிற்கு மிகவும் பொருத்தமானது. தென்னாசியாவின் இடதுசாரி இயக்கத்திற்கு நீண்ட வரலாறு உண்டு. ஏனைய அனேக பிராந்தியங்களோடு ஒப்பு நோக்கும்போது இடதுசாரிக் கட்சிகள் இங்கு பாரியளவில் செயற்பாடு கொண்டுள்ளதோடு, மக்கள் மத்தியில் இக்கட்சிகள் மிகவும் ஜனரஞ்சகமானவை. நேபாளத்தையும், இந்தியாவையும் போலவே இவற்றுள் சில பாரிய கட்சிகளாகும். அதேசமயம், சில கட்சிகள் தேர்தலில் வெற்றி கண்டு தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் அரசாங்கங்களை அமைப்பதற்கு பங்குகளிப்புச் செய்துள்ளன.

**பிராந்தியத்தின் பொது நிலைமை**

தென்னாசிய இடதுசாரி இயக்கத்தைப் பற்றி கலந்துரையாடும் இச் சந்தர்ப்பத்தில், பிராந்தியத்தின் பொது நிலைமைகளைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவதற்கு எனக்கு இடமளியுங்கள். இன்று, உலகின்

வறுமையான பிராந்தியங்களில் தென்னாசியப் பிராந்தியமும் ஒன்றாகும். எழுதத் தெரியாதவர்களாகவும், இனபேதங்களைக் கொண்டவர்களாகவும், வேறு ஒடுக்குமுறை சமூகத் தன்மை கொண்டவர்களாகவும், தொற்று நோய்களால் பாதிக்கப்படுபவர்களாகவும், உலகிலேயே மிக வறுமைக்கு உட்பட்டவர்களாகவும் இம் மக்கள் இப் பிராந்தியத்தில் வாழ்க்கை நடத்துகின்றனர். இந்த அனைத்து நாடுகளும் பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடையாத நாடுகளாகக் கருதப்படுகின்றனர். இங்கு அரசியல் நிறுவனங்களும், கட்டமைப்புக்களும் சிறந்த முறையில் வளர்ச்சியடையவில்லை. இக் காரணங்களாலும் வேறு பல காரணங்களாலும், இப் பிராந்திய நாடுகள், மத அடிப்படைவாதங்கள், இன ரீதியான மோதல்கள், சுற்றாடல் அழிவு, வசிப்பிடம் இல்லாமை, இடம்பெயர் நெருக்கடிகள், பலவந்தமான புலம்பெயர்வு, சமூகக் குற்றங்கள், பயங்கரவாதம் ஆகிய பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. சுமார் 25 ஆண்டுகளாக நிலவிய இன மோதல்கள் காரணமாக 65,000 இற்கு மேற்பட்ட உயிர்களை இலங்கை இழந்துள்ளது. அதேசமயம் சுமார் 10 ஆண்டுகளாக நேபாளத்தில் இடம்பெற்ற மாவோயிஷ்ட் ஆயுதப் போராட்டங்களால் சுமார் 17,000 உயிர்களை நேபாளம் இழந்துள்ளது. கடந்த நூற்றாண்டில் எமது நாடுகளில் ஏற்பட்ட யுத்தங்கள் காரணமாக இறந்தோர் எண்ணிக்கையை விடக்கூடிய எண்ணிக்கையினர் இந்தியாவிலும், பாக்கிஸ்தானிலும் இடம்பெற்ற மத மற்றும் இனத்துவ மோதல்களினால் உயிரிழந்தனர். வறுமை, பட்டினி, போசாக்கின்மை, எச்.ஐ.வி. எய்ட்ஸ் மற்றும் சமூகக் குற்றச் செயல்கள் காரணமாக ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அச்சத்தை உண்டுபண்ணுகின்றன. அதேசமயம், உலகத்தில் அனேகமான இயற்கை அனர்த்தங்களை எதிர்நோக்கிய நாடுகளுடன் பங்காள தேசமும் இணைகின்றது. உலர்வலய புயல் காரணமாக, வெள்ளப் பெருக்கு, ரெனாடோ மற்றும் வரட்சி ஒவ்வொரு ஆண்டும் நாட்டை அழித்து வருகின்றது. சிலவேளைகளில் ஆண்டொன்றுக்கு பலமுறை மக்கள் இவற்றை எதிர்கொள்கின்றனர். பச்சை வாயு காரணமாக புவி வெப்பமடைகிறது. எனவே, இமயமலைப் பிராந்தியத்தில் உள்ள தாழ்நிலப் பிரதேசங்களில் அமைந்துள்ள நாடுகள் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றன. பிராந்தியத்தின் வளிமண்டலம் குறிப்பிடத்தக்க கால நிலை மாற்றத்தை ஏற்கனவே அனுபவித்து வருகிறது. அதிகரித்து வரும் இவ்வச்சுறுத்தல்கள் தொடர்பாக கவனிக்குமிடத்து இப் பிராந்தியமானது மேற்படி அச்சுறுத்தல்களுக்கு எதுவித பிரதிபலிப்பையும் காட்டாத ஒரு பிரதேசமாகும். சார்க் நாடுகளின் ஒன்றியம் அமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இத்தகைய பல பிரச்சினைகளையிட்டு கவனம் செலுத்தப்பட்டு அதன் சாசனத்தில் இப் பிரச்சினைகளில் சிலவற்றை குறிக்கோள்களாக உள்ளடக்கிய போதிலும், நடைமுறைச் செயற்பாடுகளின்போது மேற்படி சாசனத்தின் வாசகங்களுக்கு அமைய செயற்படவில்லை.

தென்னாசிய நாடுகளில் பெரும்பாலானவற்றில் ஜனநாயக முறை அமுல்படுத்தப்பட்டாலும், தொடர்ச்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி அமைப்புக்கள் பிராந்தியத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணவில்லை. ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் மக்களுக்கு வகைபொறுப்புக் கூறவேண்டிய அதேவேளை, மிக இலகுவாக மக்களின் பிரச்சினைகளுக்கு பிரதிபலிப்புக் காட்ட வேண்டிய அரசாங்கங்களாகக் கருதப்பட்டாலும், எமது பிராந்தியத்தில் அது மீண்டும் மீண்டும் தோல்வி கண்டே உள்ளது.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிரான்சீயப் புரட்சி மற்றும் ஏனைய புரட்சிகளான, ரஷ்ய சோசலிசப் புரட்சி, உலகின் ஏனைய நாடுகளில் ஏற்பட்ட ஜனநாயக புரட்சிகள், சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம், சமூகநீதி மற்றும் சமூக-பொருளாதார மாற்றத்தின்மீது ஜனநாயகத்திற்கான அடிப்படைகள் அமைய வேண்டும் எனக் கருதின. ஜனநாயகம் பொருளாதாரத்திலும், சமூகத்திலும், கலாசாரத்திலும் இருத்தல் வேண்டும். சர்வதேச சட்டத்தின்கீழ் சகல ஜனநாயக உரிமைகளையும் தமது பிரஜைகளுக்கு வழங்குவதற்கு ஜனநாயக அரசுகள் கடப்பாடு கொண்டுள்ளன. தேசிய சிறுபான்மை இனங்களுக்கும், சிறுபான்மை சமூகங்களுக்கும் உரிமைகள் மாத்திரமல்ல, குறிப்பாக பாரபட்சங்களுக்கு உள்ளானவர்கள்மீது சாதகமாக நடந்துகொள்ளும் நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டும். அபிவிருத்தி மாதிரி, சமத்துவம், வறியோர்மீது அனுதாபம் செலுத்துதல், ஆகிய அனைத்தையும் ஒன்றிணைத்ததாக அமைந்தால் மாத்திரமே இதை செயற்படுத்த முடியும். உரிமைகளை வலுப்படுத்தும் அடிப்படையை உருவாக்குவது தொடர்பாக எமது கவனத்தைச் செலுத்த வேண்டும். எனவே, அபிவிருத்தியின் நன்மைகளை எல்லோருக்கும் சமமாகப் பகிரக்கூடிய வகையில் உள்நாட்டு, வெளிநாட்டு மூலதனத்தை கண்காணிக்க வேண்டும். இக் கடமையைச் செய்வதாயின் உண்மையான ஜனநாயகத்தையும், சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திமூலமே அதனை நிறைவேற்ற முடியும். அரச, அரசியல் பிரதிநிதித்துவம் மாத்திரமல்லாமல் பொதுமக்களும்

வெளிப்படையாகக் காணக்கூடிய வகையில் வகைப்பொறுப்புக் கூற வேண்டும். இதுவே உண்மையான ஜனநாயகமாகும்.

1917 இல் ரஷ்யப் புரட்சி நடந்ததோடு தென்னாசியாவின் சில புரட்சிவாதிகள் மார்க்சிஸக் கண்ணோட்டத்தை ஏற்றுக்கொண்டன. 1920 களின் ஆரம்ப கட்டத்தில் நடைபெற்ற இரண்டாம் கொமிங்ரன் மாநாட்டில் இந்திய மார்க்சிஸவாதிகள் பங்குபற்றினர். 1925 இல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்டதன்மூலம் துணிவுகொண்ட பிராந்தியத்தின் ஏனைய மார்க்சிஸவாதிகள் மார்க்சிஸ கண்ணேட்டத்தைப் பரப்புவதற்கும், ஏனைய நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளை ஆரம்பிப்பதற்கும், முன்னோடிகளாக முன்னின்று உழைத்தனர். இலங்கையில், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி 1943 இல் பிறந்தது. நேபாளத்தில் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி 1949 இல் உருவாக்கப்பட்டது. அந்தந்த நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளை அமைத்த பின்னர் அந்நாடுகளின் ஒடுக்குமுறை ஆட்சிக்கு எதிராக மக்களை அணிதிரட்டும் நடவடிக்கைகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் முக்கிய பங்களிப்பைச் செய்தன. இத்தகைய அனைத்து நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் பரந்துபட்ட கூட்டமைப்புக்களை உருவாக்கின. மேற்படி, கம்யூனிஸ்ட் கட்சிகள் தொழிலாளர்களையும், விவசாயிகளையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும், ஏனைய அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களையும் அணிதிரட்டுவதை ஆரம்பித்தன. தொண்டர் அமைப்புக்களின்கீழ் பாரிய சனத்தொகையினரை ஸ்தாபன ரீதியாக அணிதிட்டுவதில் இக்கட்சிகள் வெற்றி கண்டன.

அன்பார்ந்த தோழர்களே,

நாம் இறந்த காலத்தை மதிப்பீடு செய்து நிகழ்காலத்தை மதிப்பாய்வு செய்கிறோம். அனேகமான வெற்றிகளும், பின்னடைவுகளும் ஏற்பட்டபோதிலும் தென்னாசியாவில் முன்னேற்றம் கண்டுள்ள இடதுசாரிகளும் கம்யூனிஸ்ட் கட்சிகளும், சிறந்த ஸ்தூல ஆய்வை மேற்கொண்டு முன்னோக்கிச் செல்வதே இன்றைய அவசியமாகும். இற்றைக்கு 97 வருடங்களுக்கு முன்னர் தென்னாசிய நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டதும், கம்யூனிஸ்ட் இயக்கம் மிகப் பெறுமதியான பாடங்களைக் கற்றுக் கொண்டுள்ளது. ஒரு நூற்றாண்டுகால வரலாறு கொண்ட இடதுசாரி இயக்கம் தத்துவார்த்த ரீதியிலும் போராட்ட வடிவங்களிலும் பல்வேறு குறுக்குவெட்டுகள் பற்றி போதியளவு அனுபவங்களைக் கொண்டுள்ளன. மேலும், முன்னேறுவதற்கு உதவக் கூடிய வெற்றிகரமான அனுபவங்களை இலங்கையின் இடதுசாரிகளும், கம்யூனிஸ்ட் இயக்கமும் வழங்கியுள்ளது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின்கீழ் தென்னாசியாவின் பல்வேறு சர்வாதிகார ஆட்சியாளர்களை எதிர்நோக்கிய போது, நிலப்பிரபுக்களுக்கும், தரகு முதலாளித்துவ அதிகாரித்துவ முதலாளித்துவத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக கம்யூனிஸ்ட் இயக்கம் ஆரம்பித்ததை நாம் அறிவோம். நேபாளம் போன்ற ஒரு நாடு பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சியில் இருந்து சுயாதீனமாக இருந்தாலும், அன்றைய தென்னாசியாவின் விசாலமான நிலப்பரப்பு அதற்குச் சொந்தமாக இருந்தது. சகல தென்னாசிய நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள், பிரித்தானிய காலனித்துவ வாதிகளுக்கும் அதற்கு அடிபணிந்து சேவை செய்த உள்நாட்டு ஆட்சியாளர்களுக்கும் எதிராக திடசங்கற்பத்துடன் போராடினர். உப கண்டத்தின் உழைக்கும் மக்கள் சுரண்டலுக்கு இரையான மக்களின அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சி, சுதந்திரத்தினதும், சமத்துவத்தினதும், நியாயத்தினதும் வெற்றிப் பதாகையை உயர ஏந்தியது. இடதுசாரி இயக்கத்தின் ஆரம்ப இரண்டு தசாப்தங்களில் அதனைப் பிரதிபலிப்பதற்கு மக்கள் தமது பரந்துபட்ட ஒத்துழைப்பை கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு வழங்கினர். சீனாவில் இடம்பெற்ற புதிய ஜனநாயகப் புரட்சி உட்பட சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பேரலை, தென்னாசியாவின் இடதுசாரி மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு பாரிய ஒத்துழைப்பை வழங்கியது. எவ்வாறாயினும், அன்று சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே ஒரு பாரிய விவாதம் ஏற்பட்டது. தென்னாசியாவின் இடதுசாரிகளுக்கும், கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் இது பாதகமான பெறுபேறுகளையே ஏற்படுத்தியது. பிளவுபட்ட கம்யூனிஸ்ட் கட்சிகள் தென்னாசியாவின் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கத்தின் உபாயங்களையும், தந்திரோபாயங்களையும் பற்றிய விவாதத்தின் முரண்பாடான சுழற்சிப் பாதையில் சிக்கின. கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இப்பிளவு எவ்வளவு தீவிரமடைந்தது எனில் ஒரு பிரிவு ஆயுதப் போராட்டத்தை அங்கீகரித்ததோடு மற்றைய பிரிவினர் தேர்தலையும், பாராளுமன்ற போட்டி

அரசியலையும் அங்கீகரித்தன. இவ்வாறாக, சோவியத் யூனியனால் பிரசாரம் செய்யப்பட்ட தேசிய ஜனநாயகப் பிரச்சினையும், புதிய ஜனநாயகம் பற்றி மாவோ முன்வைத்த கோட்பாடும் அன்று தென்னாசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தை மேலும் பிளவுபடுத்துவதற்குக் காரணமாக அமைந்தன. அவ்வாறாயினும், இத்தகைய விவாதம் படிப்படியாக பலவீனமடைந்து, சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்தது. பின்னர் சீனா சோசலிச சந்தைப் பொருளாதார மார்க்கத்தில் பிரவேசித்து,சமாதானத்தையும் உலகின் நிலையான தன்மையையும் தனது அணுகுமுறையாக ஏற்றுக்கொண்ட பின்னர் மேற்படி விவாதம் முடிவுற்றது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் நிலவும் யதார்த்தத்திற்கு அமைய மார்க்சிஸம் செயற்படுவது முழுமையாக தவறற்றதாகும். இப் பெறுமதியான பாடத்தை இதன்மூலம் எமக்கு கற்பித்துள்ளது. இச் சம்பவங்கள் மூலம் நாம் அனைவரும் பாடங்களைக் கற்க வேண்டும். ஸ்தூல நிலைமைகளுக்கு ஏற்ப நாமே சரியான பயணப் பாதையைத் தெரிவு செய்ய வேண்டும்.

**எம்முன் உள்ள சவால்கள்**

இவை அனைத்தும் அவ்வாறு இடம்பெற்றாலும், பல்வேறு சமூகப்படிநிலைகள் பரந்துபட்ட முறையில் பங்குபற்றும், நீண்டதும், விசாலமானதுமான வெகுஜன அடிப்படையைக் கொண்ட தேசிய இயக்கத்தின் அனுபவங்கள் கொண்ட ஒரு பிராந்தியம் என்ற வகையில், தென்னாசியா தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க நிலையில் இருந்து வருகிறது. ஜனநாயக மற்றும் தேசிய இயக்கங்களில் மக்களின் பங்களிப்பு ஆசியாவின் ஏனைய பிரதேசங்களுக்கு முன்னுதாரணமாகும். அதிகார அடக்குமுறை ஆட்சிக்காலத்தின்போது பல்வேறு வெகுஜனப் பிரிவினர் செயற்பாட்டு ரீதியாக பங்குபற்றுவதன்மூலம் பிராந்தியத்தின் மக்கள் இயக்கம் அனைவரையும் கவர்ந்தது. மக்கள் இயக்கத்தின் சாத்தியப்பாடு பொதுமக்களின் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்த அதேசமயம் சமத்துவமின்மை பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணபதற்கு அதனால் முடிந்துள்ளது. அதேசமயம் அனேகமான கோரிக்கைகளை இதன்மூலம் நிறைவேற்ற முடிந்தது. சுயாதீனமான நீதித்துறை, பொதுமக்களுக்கு வகைபொறுப்புக் கூறும் அரசு, பிரதிநிதித்துவப் பாராளுமன்றம் உள்ளடக்கிய ஜனநாயகச் சட்டகம் இதன்மூலம் உருவாகியது.

கடந்த காலத்தில் தென்னாசியாவின் இடதுசாரி இயக்கமும், கம்யூனிஸ்ட் இயக்கமும், பல்வேறு நெளிவுசுளிவுகளின் மத்தியில் முன்னோக்கிச் சென்றுள்ளது. அது இன்றும் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றது. தென்னாசிய கம்யூனிஸ்ட் கட்சிகளில் பெரும்பாலானவை உட்கட்சிப் பிளவுகள் அல்லது தீவிர சித்தாந்த கருத்து வேறுபாடுகள் என்பவற்றிற்கு முகம்கொடுத்தன என்பதை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். அவற்றுள் சில பாரதூரமான தாக்கங்களுக்கு ஆளாகின. எமது பிராந்தியத்தின் இடதுசாரி இயக்கமும், கம்யூனிஸ்ட் இயக்கமும் தொடர்ந்தும் கோட்பாட்டு ரீதியானதும் நடைமுறை ரீதியானதுமான சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளன. அவற்றை நாம் சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின் பின்வருமாறு குறிப்பிடலாம்.

**தீவிரவாதமும் சந்தர்ப்பவாதமும்** தென்னாசியாவின் இடதுசாரி மற்றும் இடதுசாரிக் கம்யூனிஸ்ட் இயக்கம் அனேகமாக பாரதூரமான பின்னடைவுகளையும், சவால்களையும் எதிர்நோக்கியுள்ளன. இடதுசாரி, வலதுசாரி ஆகிய இரண்டு வடிவங்களிலும் தோன்றிய இடதுசாரித் தீவிரவாதமும், சந்தர்ப்பவாதமும் இதற்குக் காரணமாக அமைந்தன. ஆயுதப் போராட்டத்தின் பேராலும் வர்க்க எதிரிக்கு எதிரான போராட்டத்தின் பெயராலும் “வர்க்கப் படுகொலைகள்” போன்ற தீவிரவாத கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, சமாதான அரசியல் இயக்கத்தை முழுமையாகப் பகிஷ்கரித்து, போட்டியை தவிர்த்துக் கொண்டன. இத்தகைய எண்ணங்களும், நடத்தைகளும் தென்னாசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒருசில கம்யூனிஸ்ட் குழுக்களிடையே தொடர்ந்தும் நிலவி வருகின்றன. ஆனால் அண்மித்த ஆண்டுகளில் அதன் செல்லுபடியான தன்மை மறைந்துள்ளது. அதேசமயம், சோசலிஷக் குறிக்கோளை நோக்கிச் செல்வதைத் தடுத்து, முதலாளித்துவ வர்க்கத்திற்கு அடிபணிந்து, வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு, ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களில் இருந்து விலகிச் சென்ற, பல சந்தர்ப்பங்கள் இடதுசாரிக் கட்சிகளின் வெற்றிக்கும், வலதுசாரி சந்தர்ப்பவாதத்திற்கும் வழிவகுத்தன.

**கோட்பாடுகள் வீழ்ச்சியடைந்து குறுகிய சிந்தனைகள் தோன்றுதல்.** உலகமயமாக்கல் மற்றும் சோவியத் யூனியனின் சோசலிஷ முறைமை வீழ்ச்சியடைந்ததோடு இனத்துவம், சாதி, மதம், பிரதேசவாதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட குறுகிய சிந்தனை மேலோங்கிய சந்தா்ப்பங்களும் உண்டு. குறிப்பிடத்தக்க அளவு சித்தாந்த அடிப்படை வீழ்ச்சியடைந்த ஒரு நிலைமையையும் தென்னாசிய இடதுசாரி மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கம் எதிா்கொண்டது. இதன் காரணமாக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சித்தாந்த பிரச்சினைகள் உருவாகியதோடு, சமூகத்தில் பரந்துபட்ட முறையில் இடதுசாரிக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வளா்ச்சிக்கு சாதகமான சூழல் உருவாக்கப்படுவதைத் தடைசெய்யும் ஒரு பிரச்சினையையும் சிருஷ்டித்தது. உங்கள் நாடான இலங்கையில் இனத்துவ வன்முறை உருவாவதன்மூலம் பாரதூரமான விளைவுகளை எதிா்நோக்கிய அனுபவங்கள் உங்களுக்கு உண்டு.

**பூகோள ரீதியான சமநிலை மாறுபடுதல்.** சோவியத் யூனியனின் வீழ்ச்சியோடு பனிப்போா் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. வல்லரசு நாடுகளுக்கு இடையேயான உறவுகளிலும் மாற்றம் ஏற்பட்டது. அதுமாத்திரம் அல்ல, ஐக்கிய அமெரிக்காவிற்கும், சீனாவிற்கும், இந்தியாவிற்கும் ஏனைய பல நாடுகளுக்கும் இடையேயான உறவுகளில் மாற்றம் ஏற்பட்டது. இந்த நாடுகளில் சித்தாந்த அடிப்படை பாரிய தாக்கங்களுக்கு உள்ளாகியது. இந்நாடுகளின் அனேகமான கொள்கைகள் அவா்களின் தேசிய தேவைகளையொட்டி உருவாக்கப்படுவதில்லை. ஏனைய பலம்வாய்ந்த நாடுகளின் தேசியத் தேவைகளுக்கு அமையவே அவை உருவாக்கப்படுகின்றன. அரசியல் சித்தாந்தங்களுக்கு அமைய அவை உருவாக்கப்படுவதில்லை. அபிவிருத்தியின் வேகத்திற்கும், பொதுவாக இடதுசாரி இயக்கத்தின் நிகழ்ச்சிதிட்டத்திற்கும், குறிப்பாக தென்னாசியக் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் இது முழுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**பொருளாதாரக் கோலத்தை மாற்றியமைத்தல்.** மக்களுடைய உயிா்வாழ்வும், புலம்பெயா்வும், மக்களின் வாழ்க்கை முறைமைகளும், நாடுகளுக்கு இடையே வியாபார வாணிப நடவடிக்கைகளும், தொழில் வாய்ப்புக்களும் சாதகனமான நிலைமைகளைத் தேடி, நாட்டின் எல்லைகளைக் கடந்து நாடுகளுக்கு இடையேயான புலம்பெயா்வை விசேட முறையை மாற்றியமைத்து உள்ளது. உழைப்புத் துறையின் முக்கிய சக்தியான தொழிற்சாலைகளில் மாத்திரம் பணிபுரியும் பாட்டாளி வா்க்கத்தை எமது நாடுகளில் காண முடியாது. எமது சமூகங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனைய வகைகளைச் சாா்ந்த விசாலமான உழைக்கும் மக்கள் இருக்கின்றனா். விஞ்ஞான ரீதியான புதிய உற்பத்திகளும், தொழிநுட்ப அபிவிருத்தியும், போக்குவரத்தும் தொடா்பாடல் மாா்க்கங்களும் இடதுசாரி இயக்கத்தின்மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. எம்முன்னே பாரதூரமான சவால்களை உருவாக்கி, அது கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குப் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**சா்வதேச ரீதியில் இடதுசாரி கட்சிகளுக்கிடையே தொடா்பாடலும் ஒத்துழைப்பும் இல்லாமை.** சா்வதேச இடதுசாரி மற்றும் கம்யூனிஸ்ட் இயகத்திற்கு சா்வதேசியம் பாரிய தாக்கங்கங்கள் ஏற்படுத்திய ஒரு யுகம் இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையே ஒருவகையான நெருக்கமான தோழமை கடப்பாடும் இந்த யுகத்தில் நிலவியது. பரஸ்பரம் உதவும் சூழமைவு இருந்தது. கடந்த போன ஒரு சில தசாப்தங்களில் இந்நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. இன்று இடதுசாரி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள்கூட வெளியாரைப் பற்றி சிந்திப்பதைவிட தமது சொந்த அலுவல்களில் கவனம் செலுத்தும் போக்கையே கொண்டுள்ளன.

தலைமைத் தோழரே!

**கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கம் முன்னே உள்ள சந்தா்ப்பங்கள்.**

தென்னாசிய இடதுசாரி மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் எதிா்நோக்கும் முக்கிய சவால்களில் ஒருசிலவற்றை ஆராய்கையில் அதன் பாதகமான அம்சங்களை மாத்திரம் நான் கூறவிரும்பவில்லை. தகுதியான கொள்கைகளையும், நிகழ்ச்சி நிரல்களையும் உருவாக்குவதற்கு நாம் எதிா்நோக்கும் அபிலாஷைகளையும், பிரச்சினைகளையும் புரிந்துகொள்ள வேண்டும். ஏராளமான சந்தா்ப்பங்கள் எமக்குண்டு. சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளும் வீழ்ச்சியடைந்ததன் மூலம்

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஓர் பின்னடைவு ஏற்பட்டது. ஆனால், மார்க்ஸிசத்தினதும், சோசலிச பயனுறுதியினதும் பொருத்தபாடு இன்றைக்கும் செல்லுபடியாகும். எமது இயக்கங்களில் பிளவுகளும் பிரிவினைகளும் ஏற்பட்டாலும், குறிப்பாக தென்னாசிய சனத்தொகையின் விசாலமான பகுதியினர் இடதுசாரி மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கங்களுக்கு ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கம் பாதுகாப்பான நிலையில் உள்ளமையை நாம் புரிந்துகொண்டுள்ளோம். எனவே மீண்டும் எழுச்சியுறுவதற்கான சந்தர்ப்பம் பிரகாசமானது.

வறுமை, சமத்துவமின்மை, அநீதி, தொழில் வாய்ப்பின்மை, நிலவும் சூழலில் விசாலமான உழைக்கும் மக்கள் பாரபட்சங்களுக்கும் ஓரங்காட்டல்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். உழைக்கும் மக்கள் முதலாளித்துவத்திற்கும், நிலப்பிரபுத்துவத்திற்கும் தமது எதிர்ப்பையும், வெறுப்பையும் காட்டி வருகின்றனர். விவசாயிகள், தொழிலாளர்கள், நகர்புற வறியவர்கள், மத்தியதர வர்க்க அறிவு ஜீவிகள் மற்றும் சேவைத் துறைகளில் உழைக்கும் மக்கள் மார்க்சிஸத்தையும், சோசலிசத்தையும், கம்யூனிஸ்ட் கட்சியையும் நம்பி பல்வேறு அபிலாஷைகளுடன் தொடர்ந்தும் வாழ்க்கையை ஓட்டுகின்றனர். வெகுஜனங்களில் விசாலமான எண்ணிக்கையினர் இடதுசாரி கட்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். அதன் விளைவாக தென்னாசியக் கம்யூனிஸ்ட் கட்சிகள் இடையிடையே அரச விவகாரங்களிலும் வெற்றிகரமாக ஈடுபடுகின்றனர். அரசாங்கங்களிலும் மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களிலும் குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு அவர்களால் முடிந்துள்ளது. இந்தியாவைப் போன்ற ஒரு மாபெரும் தேசத்தில், இடதுசாரிக் கட்சிகள் தமது முக்கியமான கடமைகளை மாகாண மட்டங்களிலும், தேசிய மட்டங்களிலும், பிரதேச மட்டங்களிலும் செய்து வருகின்றனர்.

அன்பார்ந்த தோழர்களே!

தென்னாசியக் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கத்தைப் பற்றி கலந்தாலோசிக்கும்போது எனது நாடான நேபாளக் கம்யூனிஸ்ட் இயக்கம் பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற வேண்டும். இதன்போது நன்மைகளையும் தீமைகளையும், கஷ்டங்களையும் பொருட்படுத்தாது கடந்த 65 வருட காலத்திற்குள் நேபாளக் கம்யூனிஸ்ட் இயக்கம் செயற்பட்டு வந்துள்ளது. எமது யுகத்தில், எமது நாட்டில் நிலவிய மிக ஜனரஞ்சகமான சக்தி வாய்ந்த அரசியல் இயக்கம் அதுவே. நேபாளக் கம்யூனிட் கட்சியும் தனது வாழ்நாளில் இடதுசாரித் தீவிரவாதம், வலதுசாரி சந்தர்ப்பவாதம் ஆகிய இருவகைப் போக்குகளை எதிர்கொண்டுள்ளது. இதனை நாம் புறக்கணிக்க முடியாது. அதே சமயம், அது முக்கிய அரசியல் சக்தியாகவும் செயற்பட்டது. நேபாளத் தேசிய அரசியலின் மையப்புள்ளியாக அது அமைந்தது. நேபாளக் கம்யூனிஸ்ட் இயக்கம், இடதுசாரி தீவிரவாதம் அதன் வன்முறை உடைவுகள், பாரதூரமான கருத்து வேறுபாடுகள் என்பவற்றை அனுபவித்துள்ளது. அதேசமயம் மறுசீராக்கம், சாதகமான வளர்ச்சி, வெற்றி என்பவற்றையும் அடைந்துள்ளது.

சோவியத் யூனியன் துண்டுதுண்டாக உடைந்தபோது எமது கட்சி – நேபாள கம்யூனிஸ்ட் கட்சி பன்மைத்துவ ஜனநாயகக் கோட்பாட்டையும், நிகழ்ச்சித்திட்டத்தையும் ஏற்று அங்கீகரித்தது. வெகுஜனங்களிடம் எமக்குள்ள நெருங்கிய கடப்பாடு, எமது கடந்தகால அனுபவங்களைப் போலவே பல்வேறு சோசலிச நாடுகளின் அனுபவங்கள், காரணமாக எமது சூழமைவில் மார்க்சிஸத்தைச் செயற்படுத்தும்போது, புதிய நெகிழ்ச்சியான போக்கு எமக்கு அவசியமென எமது கட்சி புரிந்துகொண்டிருந்தது. எனவே 1993 இல் நடத்தப்பட்ட எமது கட்சியின் 5 ஆம் தேசிய மாநாட்டின்போது மறைந்த பொதுச் செயலாளர் மதன் பந்தாரியின் தலைமைத்துவத்தின்கீழ் சில முக்கிய தீர்மானங்களை மேற்கொண்டோம். மேற்படி கட்சி மாநாடு மக்களின் வெகுஜன- கட்சி ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது. மாற்றமடைந்த சூழமைவின்கீழ் மார்க்சிஸம் பற்றிய எமது புரிந்துணர்வைப் பேணிப்பாதுகாத்து முன்னேறுவதற்காக, தேசிய சர்வதேசிய பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராக நாம் முன்னெடுத்த போராட்டத்தின் நீண்டகால அனுபவங்களும் இத் தீர்மானங்களுக்கு அடிப்படையாக அமைந்தன. தவறுகளைத் திருத்திக் கொண்டு வெகுஜனங்களுக்கு இடையே கட்சியின் ஜனரஞ்சகத் தன்மையை மேம்படுத்துவதாயின் சட்டத்தின் ஆட்சியை அடிப்படையாகக்

கொண்ட, மக்களின் வெகுஜன ஜனநாயகத்தின்மூலம் மாத்திரமே எம்மை பரீட்சிக்க முடியும் என நாம் நம்புகிறோம்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தையும், கொள்கையையும் அடிப்படையாகக் கொண்டு மக்கள் சக்திமீது நம்பிக்கை வைத்து சமாதானமானதும், போட்டிகொண்டதுமான அரசியல் மார்க்கத்தை நாம் பின்பற்றினோம். வரட்டுக் கோட்பாட்டு வாதத்திற்கும் சரணடைவுவாதத்திற்கும் அடிபணியாமல் மார்க்சிஸத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் பேணிப் பாதுகாப்போம் என்பது எமது கோஷமாக அமைந்தது. எனவே, 1994 இல் இடம்பெற்ற தேர்தலில் எமது கட்சி வெற்றியீட்டியது. நேபாள கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தையும் அமைத்தது. மக்களுக்குச் சார்பான எமது வேலைத்திட்டத்தையும், கொள்கைகளையும் திடசங்கற்பத்துடன் முன்னகர்த்திச் சென்று நேபாளத்தில் மிகவும் ஜனரஞ்சகமான அரசை அமைத்தோம்.

கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை அமைத்தது முதல், மார்க்சிஸ தீவிரவாதிகளினதும் ஏனைய தீவிரவாதக் குழுக்களினதும் இடையூறுகளைப் பொருட்படுத்தாது அரசாங்கத்திலும், பாராளுமன்றத்திலும், உள்ளூராட்சி நிறுவனங்களிலும் எமது கட்சி தொடர்ச்சியாக பாரிய முன்னேற்றங்களைக் கண்டது. இன்று நேபாள கம்யூனிஸ்ட் கட்சி நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளில் ஒன்றாகச் செயற்படுகின்றது. நேபாள கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கத்தில் விசாலமான மக்கள் தொகையினர் செயற்பட்டு வருகின்றனர். கலைக்கப்பட்ட சட்டவாக்கச் சபையின் முழு உறுப்பினர் எண்ணிக்கையில் சுமார் 61 சதவீதம் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளே அங்கம் வகித்தனர். மக்கள் இட்ட வாக்குகளில் 55 வீதத்தை அவர்கள் பெற்றுக் கொண்டனர்.

எமது கட்சியும் ஏனைய இடதுசாரி கட்சிகளும் எதிர்வரும் நவம்பர் 19 ஆந் திகதி இடம்பெற உள்ள இரண்டாவது சட்டவாக்கச் சபைக்கான தேர்தலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பெறும் என்பது எனது நம்பிக்கையாகும்.

நேபாளத்தைப் போன்ற ஒப்பீட்டளவில் சிறிய நாடு ஒன்றில் கம்யூனிஸ்ட் கட்சி காலத்திற்கு காலம் அரசாங்கங்களை அமைத்துள்ளது. பாராளுமன்றத்திலும் அண்மையில் கலைக்கப்பட்ட சட்டவாக்கச் சபையிலும் அது சக்திவாய்ந்த இடங்களை கைப்பற்றி இருந்தது. முழுமையான சமாதான உடன்படிக்கை, இடைக்கால அரசியல் அமைப்பு பிரகடனப்படுத்தப்படுதல், சட்டவாக்கச் சபைக்கான தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தி முடித்தல், 240 ஆண்டுகள் பழைமை வாய்ந்த அரசனின் ஆட்சிமுறையை நிறைவு செய்து, ஓர் குடியரசை பிரகடனப்படுத்துதல், ஜனநாயக முறைமையை நிறுவன மயமாக்கி அதனை வலுப்பெறச் செய்வதற்காக மென்மேலும் முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ள முடிந்தது. இவை அனைத்தும் கம்யூனிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்ட் அல்லாத கட்சிகளும் ஆரம்பித்த சமாதானமான போராட்டங்களின்மூலமே வெற்றிகொள்ள முடிந்தது. இது வரலாற்று ரீதியான வெற்றி என்பதை நாம் மறந்துவிட முடியாது.

நேபாளத்தின் மக்கள் இயக்கத்திற்கு கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் மிக நெருங்கிய கடப்பாடும் உறவும் உண்டு. சகல சந்தர்ப்பங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சி பொதுமக்கள் போராட்டங்களின் பங்காளனாகவே செயற்பட்டு வந்தது. அவர்கள் வெகுஜனங்களுடன் பின்னிப்பிணைந்து செயற்பட்டனர். கட்சியும் அதன் உறுப்பினர்களும் வெகுஜனங்களுடன் பின்னிப் பிணைந்து வாழவேண்டும். வெகுஜனங்களின் தேவைகளையும், எண்ணங்களையும், அபிலாஷைகளையும் வென்றெடுப்பதற்காக செயற்பட வேண்டுமென கட்சி எப்போதும் நம்பிக்கை கொண்டிருந்தது. எமது கட்சி சகல சந்தர்ப்பங்களிலும் மக்களோடு ஒன்றிணைந்து செயற்பட்டது. நாம் எப்போதும் பொதுமக்களின் பிரச்சினைகளை புரிந்துகொள்ள முயற்சித்தோம். மக்களின் பிரச்சினைகளை பிரதேச மட்டத்திற்கும், தேசிய மட்டத்திற்கும் எடுத்துச் செல்ல முயற்சி செய்துள்ளோம்.

இவ்வாறாக நேபாளக் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கம் கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் தென்னாசிய கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் இடசாரி இயக்கத்திற்கும் ஒரு பிரகாசமான ஒளியையே வழங்கி வந்தது.

தென்னாசியாவின் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கம் அபிவிருத்திக்கான விசாலமான எதிர்பார்ப்பை வைக்கக்கூடிய அமைப்புக்கள் என மேற்படி உதாரணங்கள்மூலம் தெளிவாகிறது.

அதேசமயம், சா்வதேசத் துறையில் ஒருசில சோசலிச அரசுகள் மிகக் கஷ்டமான போராட்டங்களின் பின்னா் மக்களின் வாழ்வை மேம்படுத்தி வெற்றிகரமாக சோசலிசத்தைப் பேணிப் பாதுகாத்து அபிவிருத்தி செய்துள்ளன. தமது நாடுகளுக்கு சுபீட்சத்தையும், சமத்துவத்தையும் நீதியையும் வென்றெடுத்ததோடு தமது சமூகங்களில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

காலத்திற்கு ஏற்ப நாம் தகுதியான கோட்பாடுகளையும் உபாய மாா்க்கங்களையும் தந்திரோபாயங்களையும் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். மாா்க்சிஸம் வெறுமனே தத்துவாா்த்த வரட்டு வாதம் அல்ல. நடைமுறைக்கு வழிகாட்டும் விஞ்ஞான ரீதியான தத்துவமாகும். இதனை நாம் புரிந்துகொண்டுள்ளோம். அடிப்படை மாா்க்சிஸத்தையும், சோசலிசக் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தி கம்யூனிஸ்ட் இயக்கத்தையும், இடதுசாரி இயக்கத்தையும் தகைமைசாா் மாா்க்கத்தில் வழிநடத்தினால் பரந்துபட்ட வெகுஜனங்களின் ஒத்துழைப்பை நாம் வென்றெடுக்க முடியும். அனைத்தும் உலகமயமாக்கப்பட்ட இவ் உலகில், கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி கட்சிகளிடையே உட்கட்சி ஐக்கியம் - சா்வதேச ஒத்துழைப்பு ஆகிய இரண்டு அம்சங்களும் அவசியமாகும். மக்களுக்கும் சமூகத்திற்கும் அதற்கான சந்தா்ப்பத்தைப் பெறுவதற்கு கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி கட்சிகள் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும். இவ்வாறாக நாம் பெற்ற வெற்றிகளைப் பேணிப் பாதுகாத்து கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கத்தை நாம் விரிவாக்க முடியும்.

தலைமைத் தோழரே!

சமகால உலகின் பல்வேறு சவால்களுக்கும் நாம் முகம்கொடுக்க வேண்டும். அதேசமயம் பல அரிய சந்தா்ப்பங்களும் எம்முன்னே உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட அளவுகோலின்கீழ் தயாரிக்கப்பட்ட புரட்சியினதும், சமூக மாற்றத்தினதும் மாதிரிகள், உலகின் வலதுசாரி மற்றும் இடதுசாரி அரசியல் போக்குகளில் கிடையாது. சிருஷ்டிகரமான தன்மையையும், ஸ்தூல நிலைமையும் கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு இடதுசாரி கட்சிகளுக்கு அதிகளவில் பொருந்தும். நாம் விஞ்ஞான தொழிநுட்ப புதிய சிருஷ்டிகளையும் அபிவிருத்தியையும் மாத்திரம் கவனத்தில் கொள்ளாது, எமது யுகத்தில் என்றுமே இல்லாத வகையில், நாட்டெல்லைகளின் ஊடாக மனிதா்களும், பொருட்களும் சேவைகளும் அங்குமிங்கும் எடுத்துச் செல்லப்படுவதையும் அதானித்தல் வேண்டும். கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியிடப்பட்ட 1848 ஆம் வருடத்திற்கும் இந்த நூற்றாண்டிற்கும் இடையே அமைந்துள்ள மாற்றங்களை நாம் சரியாக அளவிட வேண்டும். காலம் மனித குல அபிவிருத்தி ஆகிய இரண்டும் எம்முன் உள்ள சவால்களும் சந்தா்ப்பங்களும் ஆகும். திறமை வாய்ந்த முறையில், வெகுஜனங்களை சாதகமான முறையில் ஸ்தாபனமயப்படுத்தி அணிதிரட்டுவதன்மூலம்,தென்னாசிய சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் அளவிற்கு சாத்தியமும் மறைசக்தியும் மாா்க்சிஸத்திற்கும், கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கத்திற்கும் உண்டு. ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களையும் நிலைமைகளின் சலனத்தையும் விஞ்ஞான ரீதியில் புரிந்துகொள்ள முடியாவிட்டால் பின்னடைவுகளையும் தோல்விகளையும் நாம் காண நேரிடும். நாம் அனைவரும் இது குறித்து கவனமாகச் செயற்பட வேண்டும்.

இத்தகைய விழாக்களை இலங்கைக் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி இயக்கமும், தென்னாசிய இடதுசாரி கம்யூனிஸ்ட் இயக்கமும் தொடா்ந்தும் உறுதிப்படுத்தி, அபிவிருத்தி செய்வதற்காக பங்களிப்புச் செய்ய வேண்டுமென நான் நம்புகின்றேன். உங்கள் விழா பூரணமாக வெற்றியடைய வேண்டுமெனப் பிராா்த்திக்கின்றோம். கொழும்பில் எனக்கு வழங்கப்பட்ட விருந்தோம்பலுக்காக பொதுச் செயலாளருக்கும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்து தலைவா்களுக்கும், உறுப்பினா்களுக்கும் உனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

உங்கள் அனைவருக்கும் நன்றி. வணக்கம்!